**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC .126/2023** | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : | விஸ்வநாதன் | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | கணபதி | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( all Accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.02.2026

---

**முதல் விசாரணை:**

நான் தற்போது பொட்டுலுபட்டியில் குடியிருந்து வருகிறேன். எதிரி எனது பக்கத்து வீட்டுகாரர்கள் ஆவார். அரசு தரப்பு சாட்சிகளை எனக்கு தெரியும். நான் கடந்த 2023ம் வருடம் எதிரிகள் மீது இருந்த மனகசப்பின் காரணமாக எதிரி மீது மிகைப்படுத்தி புகார் அளித்துவிட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நான் எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

கடந்த 18.06.2023ம் தேதி போலிபட்டி கிராமத்தில் ஊராட்சி மன்ற தலைவர் சொன்னதன் பேரில் அங்கு பைப் லைன் பஞ்சர் சரிசெய்து கொண்டிருந்தேன் என்றும், அப்போது பொட்டுலுபட்டி ஊராட்சி மன்ற தலைவர் அமைதி அவர்கள் என்னை மேற்படி ஊராட்சி அலுவலகத்திற்கு வர சொன்னார் என்றும், அதன்படி நான் 1.30 மணிக்கு சென்றேன் என்றும், அப்போது அங்கிருந்த எதிரிகள் இருவரும் என்னை பார்த்து அசிங்கமான வார்த்தையால் பேசினார்கள் என்றும், எதிரி காசி

என்னை செருப்பு காலால் எத்தினார் என்றும், அருகில் இருந்த இருசக்கர வாகனத்தில் இருந்த வயரை வைத்து என்னை முதுகில் அடித்தார் என்றும் எதிரிகள் இருவரும் சேர்த்து அரசு பணியை செய்யவிடாமல் தடுத்தார் என்றும், அப்போது அருகில் இருந்த சாட்சிகள் எதிரியை விலக்கிவிட்டார்கள் என்றும் எதிரி மீது நடவடிக்கை எடுக்க புகார் அளித்துவிட்டு, நான் தற்போது எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டு, அவருக்கு ஆதரவாகவும், உண்மைக்கு புறம்பாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டு, சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சமாதான மனு **(எ.த.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

S.d. Viswanathan
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.